Salve Regina

மலர்: 1 நவம்பர் 2006 (தனிச்சுற்றுக்கு மட்டும்) இதழ்: 2

**உன் கடைசி முடிவுகளை நினைவு கூர்ந்து கொள். ஒரு போதும் பாவம் செய்யமாட்டாய்.** (சீராக்.7:40)

சேசுவில் அன்பார்ந்த விசுவாசிகளே, நமது கடைசி முடிவுகளை அடிக்கடி நினைவு கூர்வது மிகவும் பயனுள்ள காரியமாகும். ஏனென்றால், இந்த நினைவானது பாவத்தை விலக்கவும், புண்ணியத்தில் வளர்ச்சி அடையவும் பெரிதும் உதவும். இதை நினைவில் கொண்டு தான் தாய்த்திருச்சபை, இந்த நவம்பர் மாதத்தில் நமது நித்திய வாழ்வைச் சிந்திக்கும்படியாக சில திருவழிபாட்டுத் திருநாட்களையும், நினைவு (commemoration) பூசைகளையும் ஏற்படுத்தி, நமது நான்கு கடைசி முடிவுகளான **மரணம், தீர்வை, மோட்சம், நரகம்** ஆகியவற்றை நாம் தியானிக்கும்படி தூண்டுகிறது.

நவம்பர் மாத முதல்தேதியில் சகல அர்ச்சிஷ்டவர்களின் திருநாளைக் கொண்டாடுகிறோம். இந்தத் திருநாளானது, முன்பு ஒரு காலத்தில் நம்மைப் போல பூமியில் வாழ்ந்து கஷ்டப்பட்டு, உலகம், சரீரம், பசாசு என்ற மூன்று ஞான எதிரிகளை வென்று, ஜெயசீலர்களாய் இன்று மோட்சத்தில் சர்வேசுவரனை முகமுகமாய்த் தரிசிக்கும் இவர்களுடைய மோட்சப் பேரானந்தத்தை நமக்குக் காட்டுகிறது.

இரண்டாம் நாளில், நாம் சகல மரித்த ஆத்துமாக் களின் நினைவைக் கொண்டாடுகிறோம். இந்த நினைவும் சரி, திருவழிப்பாட்டு ஆண்டின் கடைசி ஞாயிறின் சுவிசேஷமும் சரி, இவை மற்ற மூன்று கடைசி முடிவுகளாகிய மரணம், தீர்வை, நரகம் ஆகியவற்றை நமக்கு ஞாபகமூட்டுகின்றன.

நமது நான்கு கடைசி முடிவுகளைக் காலம் உள்ள போதே அதாவது, இப்பொழுதே சிந்தித்து பார்ப்பது மிகவும் அவசியம். ஒருவேளை பின்பு அதற்கு வாய்ப்பு இல்லாமல் போகக்கூடும்.

மரணம் நமக்கு எப்பொழுது வரும் என்பது தெரியாது. சேசுநாதர் சுவிசேஷத்திலே, சாவு திருடனைப் போலத் திடீரென்று இரவில் வரும் என்றும், "நாம் நினையாத நாளிலும், அறியாத நேரத்திலும்" (மத்.24:50) நேரிடாதபடி விழித்திருங்கள் என்றும் நம்மை எச்சரிக்கிறார்.

இந்த நமதாண்டவரின் எச்சரிக்கையைத் தான், அவருடைய ஞான சரீரமாகிய திருச்சபை, தனது திருவழிப்பாட்டின் மூலமாக நமக்கு வழங்கி நம்மைத் தயார் செய்கிறது. எவ்வளவுக்கு எவ்வளவு நாம் இந்த 4 கடைசி முடிவுகளைப் பற்றி சிந்திக்கிறோமோ, அவ்வளவுக்கு அவ்வளவு அதை எதிர்கொள்வதற்குத் தயாராகுவோம்.

**"...Beati mortui, qui in Domino Moriuntur..."**

(Ap. 14:13)

**"ஆண்டவருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள்"**

(காட்சி. 14:13)

அதோடு இந்த மாதத்தில் உத்தரிக்கிற ஸ்தலத்தில் வேதனைப்படும் ஆன்மாக்களுக்காகவும் ஜெபிப்போமாக!

**அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை,**
பாளையங்கோட்டை

**"மரித்தோர்களுக்காக வேண்டிக்கொள்வது பரிசுத்தமும் பிரயோசனமுமுள்ள எண்ணமாயிருக்கிறது"** (2 மக்கபே. 12:46)

சகல அர்ச்சிஷ்டவர்கள் திருநாள் தரும் போதனை:

# “நீங்கள் அர்ச்சிஷ்டவர்களாக வேண்டும் ...” (1 தெச. 4:3)

ஆம்! அதுவே சர்வேசுவரனுடைய சித்தம். திருச்சபையினுடைய நோக்கம். தாயாகிய திருச்சபை தமது மக்கள் இரட்சணியமடைய வேண்டும் என்பதற்காகவே வேத சத்தியங்களைப் போதிப்பதிலும், வழி காட்டுதல்களிலும் வெகுவாய்ப் பிரயாசைப்படுகிறது. அதற்காக ஜெபிக்கிறது. அதோடு மோட்சமகிமை அடைந்த தமது குழந்தைகளை எண்ணி மகிழ்ந்து, அக்களிப்புக் கொள்கிறது. “சகல அர்ச்சிஷ்டவர்களுடைய மகிமையைக் குறித்து திருநாள் கொண்டாடி, ஆண்டவரில் அனைவரும் அகமகிழ்வோம். அவர்களுடைய திருநாளில் சம்மனசுக்கள் அக்களித்து, சர்வேசுவரனுடைய திருக்குமாரனைப் புகழ்கின்றார்கள்.“ (சகல அர்ச்சிஷ்ட வர்கள் திருநாள் பூசையில் பிரவேசக் கீதம்) என்று அனைத்துக் கிறீஸ்தவ உலகிற்கும் சுட்டிக்காட்டி தமது மகிழ்ச்சியில் பங்கு பெற அழைக்கின்றது. அதற்காக சகல அர்ச்சியசிஷ்டவர்களின் திருநாளை ஏற்படுத்தி தமது விசுவாசிகளை அந்த மோட்சமகிமையில் பங்கடையுமாறுத் தூண்டுகிறது.

## அர்ச்சிஷ்டவர்களின் மகிமை!

சுவிசேஷம் மோட்சமகிமையைப் பற்றித் தெளிவாகக் கூறுகிறது. அதிலும் குறிப்பாக அர்ச். அருளப்பர் தமது காட்சியாகமத்தில், ‘‘சகல ஜாதிகளிலும், கோத்திரங்களிலும், தேசத்தாரிலும், பாஷைக்காரரிலும் இருந்து வந்ததும், எவராலும் எண்ணக் கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்களைக் கண்டேன். இவர்கள் வெண்மையான வஸ்திரந்தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்துக் கொண்டு, சிங்காசனத்தின் முன்பாகவும், செம்மறிப் புருவையின் சமூகத்திலும் நின்றார்கள்‘‘ (காட்சி. 7:9) என்று, தாம் கண்ட பெருந்திரளான அர்ச்சிஷ்டவர்கள் அனுபவிக்கும் மோட்ச மகிமையை எடுத்துக் கூறுகிறார். அதோடு வேதசாட்சிகள், அப்போஸ்தலர்கள், துதியர்கள் மற்றும் கன்னியர்கள் என்ற வரிசையினரான அவர்கள் ஒளிபொருந்தியவர்களாக, சர்வேசுவரனின் தரிசனத்தில் முடிவில்லா ஆனந்தம் கொண்டவர்களாக: ‘‘எங்கள் சர்வேசுவரனுக்கு ஸ்துதியும், மகிமைப் பிரதாபமும், ஞானமும், பலமும் காலாகாலங்களுக்கும் உண்டாவதாக. ஆமென்’’ (காட்சி. 7:12) என்று ஸ்துதித்துக் கொண்டிருந்தனர் என்பதாய் காட்சியாகமம் மேலும் கூறுகிறது.

**மோட்ச மகிமையில் சகல அர்ச்சிஷ்டவர்கள்**

இந்த மகிமையடைந்த அர்ச்சிஷ்டவர்கள் யார்? இவ்வுலகில் வாழ்ந்தவர்கள். நம்மைப் போல துன்பங்களையும், துயரங்களையும், போராட்டங்களையும் அனுபவித்தவர்கள்! அவர்களில் சிலரை நாம் எளிதில் அடையாளம் காண முடியும்! ஏனெனில் அவர்களைத் திருச்சபை பீடவணக்கத்திற்கு உயர்த்தியுள்ளது. பெருவாரியானவர்கள் நாம் அறியாதவர்கள். ஆனால் தங்கள் அந்தஸ்தின் கடமைகளை வெகு பிரமாணிக்கமாய் அனுசரித்து, தங்களையே மறைத்துத், தாழ்ச்சியுடன் வாழ்ந்தவர்கள். யாராலும் நினைக்கப்படவோ, கவனிக்கப் படாதவர்களாகவோ வாழ்ந்தவர்கள். ஆனாலும் அனைத்தையும் அறியும் பரலோகத் தந்தையால் அறியப்பட்டுத் தங்களது பிரமாணிக்கம் நிரூபிக்கப்பட்டவர் களாய் அவரது மகிமைக்கு அழைக்கப்பட்டவர்கள், உயர்த்தப்பட்டவர்கள்.

## தேவசிநேகமே பிரதானம்!

இந்தப் பெருங்கூட்டத்தில் சிலர் தங்களின் வாழ்நாளில் மிகப்பெரிய பதவிகளையோ, அந்தஸ்து களையோ கொண்டவர்களாக இருந்திருக்கலாம். ஏன், அரியப்பெரிய காரியங்களைச் செய்தவர்களாகவும் இருக்கலாம். இன்னும் சிலர் உலகில் வாழும் போது

தங்களிடம் எந்தவிதமான மதிப்பையோ உயர்வையோ கொண்டிருக்காதவர்களாகவும் இருக்கலாம்; நித்தியப் பாக்கியம் உலகில் பெரியவற்றைச் சாதித்ததினால் தீர்மானிக்கப்படுவதில்லை. மோட்சம் செல்லத் தாழ்ந்த வர்கள், உயர்ந்தவர்கள், ஏழைகள் அல்லது செல்வந் தர்கள் என்ற வேறுபாடுகள் அவசியமில்லை. ஆனால் ஒன்றே ஒன்று மட்டுமே தேவை. அது தேவ சிநேகம்! ஆம். உலகில் வாழும் போது எந்த அளவில் தேவ சிநேகம் கொண்டிருந்தார்களோ அந்த அளவிலேயே தான் நித்திய ஆனந்தத்தின் மகிமையைப் பெறுவார்கள்.

## அர்ச்சிஷ்டவர்களின் வாழ்வு!

மோட்ச மகிமையில் திளைக்கும் அர்ச்சிஷ்ட வர்கள் இவ்வுலகில் இருக்கும் போது அனுசரித்தப்புண்ணியங்கள் மற்றும் வாழ்ந்த வாழ்வை சுவிசேஷத்தின் பக்கங்கள் நமக்கு வெளிப்படுத்துகின்றன. குறிப்பாக: **மனத்தரித்திரர் பாக்கியவான்கள்... சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்... அழுகிற வர்கள் பாக்கியவான்கள்... நீதியின் மேல் பசிதாக முள்ளவர்கள் பாக்கியவான்கள்... இரக்கமுள்ள வர்கள்... தூயஇருதயம் உள்ளவர்கள்... சமாதானம் பண்ணுகிறவர்கள்... நீதியினிமித்தம் உபத்திரப் படுகிறவர்கள் பாக்கியவான்கள்** (மத். 5:3-10). இந்த சுவிசேஷ வாக்கியங்கள் குறிப்பிடும் புண்ணியங்களான தரித்திரம், தாழ்ச்சி, உலகப் பொருட்களின் மேல் பற்றற்ற நிலை, இருதயத்தில் சாந்தம், அமைந்த மனது, துயரத்தில் பொறுமை, நேர்மை, நீதியின் மீது பசிதாகம், தயாளம், பிறரைப் புரிந்துக் கொள்ளுதல், மனதிலும் இருதயத்திலும் தூய்மை, உள்ளத்தில் சமாதானம், தன்னடக்கம், பெருந்தன்மை, கடவுளின் அன்புக்காகத் துன்ப துயரங்கள், அநீதங்களைச் சகித்துக் கொள்ளுதல் போன்றவற்றை அர்ச்சிஷ்டவர்கள் தங்களது வாழ்வின் அம்சங்களாகக் கொண்டு வாழ்ந்தார்கள். அவர்களைப் போல அர்ச்சிஷ்டவர்களாக விரும்புகிறவர்கள், இந்தப் புண்ணியங்களைத் தங்களது வாழ்வின் செயல் முறைகளாகக் கொள்ளவேண்டும்.

## அர்ச்சிஷ்டத்தனத்தை விரும்ப வேண்டும்!

கிறீஸ்தவர்களாகிய நமது வாழ்வின் மகுடம் - அர்ச்சிஷ்டவர்களாவதே! ஆம், அதற்காகவே நாம் படைக்கப்பட்டோம். அதற்காக வேதான், மீட்பர் கிறீஸ்துநாதரின் மனிதாவதாரம், அவரின் கொடியச் சிலுவை மரணம்! அதனை குறிக்கோளாகக் கொண்டு தான் திருச்சபையின் ஸ்தாபகம் - அதன் அப்போஸ்தலிக்க அலுவல்கள் என்ற மீட்பின் செயல்பாடுகள்! எனவே முதலில் நாம் அர்ச்சிஷ்டவர்களாக வேண்டும் என்று ஆசிப்போமாக.

நம்மிடம் உள்ள குறைபாடு என்ன? நாம் புனிதர்களாக வேண்டும் என்று விரும்புகிறோம். ஆனால் அது எந்தவிதமான சிரமமோ, முயற்சியோ இல்லாமல் சுலபமாகக் கிடைக்க வேண்டுமென்று நினைக்கின்றோம். எந்த ஒரு பெரிய பரித்தியாகத்தையும் செய்யாமல், நம்மிடமுள்ள **தான்** என்ற அகந்தை, **சுயநலம்** ஆகியவற்றை அகற்றாமல் மேலோட்டமாக புண்ணியங்களை அனுசரிக்க எண்ணுகிறோம். அந்த அளவிற்கு மேல் செல்வது அவசியமில்லை என்று நினைக்கிறோம்.

ஆனாலும், அர்ச்சிஷ்டத்தனத்தில் வளருதல் என்பது நாம் ஏற்கத் தயங்குகின்ற இந்தக் காரியங்களை நிறைவேற்றுவதில் தான் உள்ளது. இவை இல்லாமல், அவற்றில் வளராமல், நாம் தாழ்நிலையில் தான் இருப்போம். இதனால் தான் தாய்த்திருச்சபை சகல அர்ச்சிஷ்டவர்களின் திருநாளை ஏற்படுத்தி, மகிமை யடைந்த தமது மக்களை, நமக்கு முன்மாதிரிகையாகக் காட்டி, அவர்களைப் போல உத்தமதனத்தில் வளர்ந்து அர்ச்சிஷ்டவர்களாக வாழ நம்மைத் தூண்டுகிறது. அவர்கள் நமக்கு இதில் உதவிட, மன்றாடும்படி நம்மை அழைக்கிறது.

நாமும் சகல அர்ச்சிஷ்டவர்களிடம், நமது குறைகளைக் களைந்து உத்தமதனத்தில் வளர்ந்து அர்ச்சிஷ்டவர்கள் ஆக நமக்கு உதவும்படியாக ஜெபிப்போம்.

**"சகல அர்ச்சிஷ்டவர்களே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள் "**

◆✠✠✠◆

ஆன்மாக்கள் சுத்திகரமாகிற ஸ்தலமே உத்தரிக்கிற ஸ்தலம் என அழைக்கப்படுகிறது. இறந்து போன ஆன்மாக்களுக்கு மூன்று ஸ்தலங்கள் உண்டு என சத்தியத்திருச்சபை போதிக்கிறது. மூர்க்கரானப் பாவிகளுக்கு **நரகம்**. முற்றிலும் பரிசுத்தமுள்ள ஆன்மாக்களுக்கு **மோட்சம்**. பாவங்களுக்காக இன்னும் பரிகரிக்க வேண்டிய ஆன்மாக்களுக்கு **உத்தரிக்கிற ஸ்தலம்.**

உத்தரிக்கிற ஸ்தலத்திலே வாதைப்படுகிற ஆன்மாக்களுடைய வேதனைகளை நம்முடைய ஜெபதவ, தானதர்மத்தினாலும், திருச்சபையின் வேண்டுதலினாலும் விசேஷமாய்த் திவ்விய பலிபூசையினாலும் அமர்த்திக் குறைக்க முடியும். சேசுநாதர் சுவாமி இவ்வுலகத்தை மீட்டு இரட்சிக்க வருமுன் வாழ்ந்து வந்த அசீரியர்களும், பெர்சியரும், எஜிப்தியரும், கிரேக்கரும், ரோமானியரும் மரித்தவர்களைக் குறித்து அநேகச் சடங்குகளையும் வேண்டுதல்பலிகளையும் செலுத்திக் கொண்டு வந்தார்கள் என்பது வரலாறு. நமது இந்திய தேசத்தில்கூட, அஞ்ஞான மதத்தோர் இறந்தவர்களுக்காக 'திதி' போன்ற சடங்குகளை நிறைவேற்றி வருவதை நாம் அறிவோம்.

## வேதாகமப் போதனை:

பழைய ஏற்பாட்டில் யூதர்கள் மரித்தவர்களுடைய ஆன்மாக்கள் தங்கள் பாவங்களில் இருந்து மீட்டு இரட்சிக்கப்பட்டு மோட்சப் பேரின்பத்தை அடையும் பொருட்டு ஜெபம், தர்மம், பலிகளினாலே பிரயாசைப் பட்டார்கள் என வேதப்புத்தகங்களிலே அறிந்து கொள்ளலாம். உதாரணமாக, மகா வீரரான யூதா, மக்கபேயர் என்னும் ஜனங்களிடமிருந்து மிகுந்த பணம் சேகரித்துப் பன்னிரண்டாயிரம் வெள்ளிக்காசுகளை ஜெருசலேம் நகரில் இருக்கும் சர்வேசுவரனுடைய ஆலயத்துக்கு அனுப்பி, மரித்தவர்களுடைய பாவங்களுக்காகப் பலியும், ஜெபங்களும் ஒப்புக்கொடுக்கப் பண்ணினார். (காண்க. II மக்கபே. 12:43-46)

## திருச்சபையின் போதனை:

அர்ச்.இராயப்பருக்குச் சீடராய் இருந்த அர்ச். சாந்தப்பர் என்னும் பாப்பரசர் பிரகடனம் செய்த அப்போஸ்தலிக்கக் கட்டளைகளின் 8-ஆம் அதிகாரத்திலே: "சர்வேசுவரனுடைய சமாதானத்தில் மரித்த நமது சகோதரருடைய ஆன்மாக்களுக்கு ஆண்டவர் கிருபை செய்து அவர்கள் பாவங்களைப் பொறுத்து அவர்களை ஆபிரகாமுடைய மடியான மோட்சத்தில் சேர்த்துக் கொள்ளும்படி வேண்டிக் கொள்வோமாக" எனக் கூறுகிறார். திருச்சபையின் மகா சாஸ்திரியான ஓரிஜன் என்பவர், "இவ்வுலகப் போராட்டத்திலிருந்து மறுவுலகத்திற்குப் போகிறவன் உத்தரிக்கவேண்டியிருப்பதால், மரித்தவர்

களுக்கா வேண்டிக்கொள்வது கடமையும் பிரயோஜனமுமான பழக்கம்“ என்கிறார்.

தமது மரணத்தருவாயில் அர்ச். எபிரேம் தம்முடைய சீடர்களை நோக்கி: “என் பிரியமுள்ள பிள்ளைகளே! மரிக்கப் போகிற உங்களுடைய தகப்பனாகிய எனக்குக் கடைசி உபகாரம் செய்ய வாருங்கள். என் சரீரத்திற்கு பரிமளங்களைக் கொடுக்க வேண்டாம். ஆனால் நான் சர்வேசுவரனிடத்தில் கிருபை அடையும் பொருட்டு என் ஆத்துமத்துக்காக வேண்டிக்கொள்ளுங்கள். இனிமேல் தேவாலயத்தில் நீங்கள் கூடும்போது என்னை மறவாமல் எனக்காக ஜெபிக்க வேண்டும்“ என்கிறார். மேலும் அர்ச். கிறிஸோஸ்தோமுஸ், அர்ச். எரோணிமுஸ், அர்ச். பசீலியார், அர்ச். சிறில், அர்ச். கிரகோரியார் முதலான வேதசாஸ்திரிகள் இதே சத்தியத்தை விவரித்து எழுதி இருக்கிறார்கள்.

புளோரன்ஸ் பட்டணத்தில் கூடிய மேற்றிராணிமார்களுடைய பொதுச்சங்கத்தில் பிரகடனம் செய்யப்பட்ட தீர்மானம் என்னவென்றால்: “மெய்யான மனஸ்தாபப்பட்டு பாவிகள் தங்களுடைய பாவங்களுக்கு தவமுயற்சிகளால் இவ்வுலகத்தில் பரிகாரம் செய்யாமலே இறந்து போனால், அவர்களுடைய ஆன்மாக்கள் உத்தரிக்கிற ஸ்தலத்தினுடைய வேதனைகளால் சுத்திகரிக்கப்படும். அப்போது இந்த ஆன்மாக்களை உலகத்திலே வாழ்கிற கிறீஸ்தவர்களுடைய மன்றாட்டுகளினால் மீட்டு இரட்சிக்க முடியும“.

மேலும் 1583-ம் ஆண்டில் திரிதெந்தின் பொதுச் சங்கத்தில் பிரகடனம் செய்யப்பட்ட தீர்மானத்தின்படி உத்தரிக்கிற ஸ்தலம் இருக்கிறது என்றும், அதில் சிறைப்பட்ட ஆன்மாக்கள் திவ்விய பலிபூசையினாலும் விசுவாசிகளுடைய மன்றாட்டுகளினாலும் ஆறுதலும் உதவியும் பெற்றுக கொள்வார்கள். இந்தப் பரம சத்தியத்தை, குருக்கள் எல்லோரும் தங்கள் விசாரணைக் கிறீஸ்தவர்களுக்கு குறைவின்றிப் போதித்து, அவர்கள் அதைச் சரிவர ஏற்றுக்கொள்ளும்படியாய்ச் செய்ய வேண்டுமென்று கற்பிக்கிறது. நித்திய நரகத்தில் சபிக்கப் பட்டப் பாவிகள் அனுபவிக்கும் ஆக்கினைகளுக்கும் உத்தரிக்கிற ஆன்மாக்கள் படும் வேதனைகளுக்கும் ஒரேயொரு வித்தியாசம் உண்டு. அது என்னவென்றால் உத்தரிக்கிற ஸ்தலத்தினுடைய வேதனை அநித்தியமானது, ஆனால், நரக வேதனை நித்தியமானது என்று அர்ச். சிறிலுஸ், அர்ச். தோமாஸ் அக்குயினாஸ் போன்றவர்கள் நிச்சயித்து உள்ளார்கள்.

ஆகவே கிறீஸ்தவர்கள் இத்தகைய வாதை, வருத்தங்களையும் தவிர்க்க, அற்பப் பாவங்களை முதலாய் மிகக் கவனத்துடனே விலக்க வேண்டும். சிறுவயதிலும், வாலிபத்திலும், முதுமையிலும் கட்டிக்கொண்ட சாவான பாவங்கள் எத்தனையென்று நினைத்து நல்லப் பாவசங்கீர்த்தனம் செய்து மன்னிப்பை அடைந்திருந்தாலும், அவைகளுக்காகப் போதிய பரிகாரம் செய்யாமல் இருந்திருந்தால் அதற்காக உத்தரிக்கிற ஸ்தலத்தில் எத்தனை நாள், எத்தனை வருஷம், வேதனை அனுபவிக்க வேண்டியிருக்கும் என்பதைச் சிந்திக்க வேண்டும். இவ்வுலகத்தில் உள்ளவர்களுக்கு வியாதியினால், பசிதாகத்தினால், எதிரிகளுடைய விரோதத்தினால் எவ்வளவு துன்பங்கள் வருகிறதென்று நாம் அறிவோம். ஆனால் உத்தரிக்கிற ஸ்தலத்தின் வேதனைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் இவையெல்லாம் அர்ப்பமானவை. அவைகளைப் பொறுத்துக் கொண்டால் நம் பாவங்களுக்கு நல்ல பரிகாரமாக அமையும் என்பதையும் அறிய வேண்டும். அதோடு உத்தரிக்கிற ஸ்தலத்தில் வேதனைப் படுகிற ஆன்மாக்களுக்காகவும் நாம் எப்பொழுதும் ஜெபித்து வருவோமாக.

**"ஆண்டவரே அவர்களுக்கு நித்திய இளைப்பாற்றியைத் தந்தருளும். அவர்கள் மீது நித்திய ஒளி ஒளிரக் கடவது "** (சங். 64:2-3)

## உத்தரிக்கிற ஆன்மாக்களுக்கு தேவமாதாவின் உதவி

**தேவதாய் உத்தரிக்கிற ஸ்தல ஆன்மாக்கள் மீது மிகுந்த அன்புகொண்டு அவர்களுக்கு உதவுகிறார்கள். குறிப்பாக, கார்மெல் உத்தரியப்பக்தி கொண்டவர்களுக்கு "சனிக்கிழமைச் சலுகையினால்" (Sabatine privilege) அவர்கள் மரித்த வாரத்தின் சனிக்கிழமையன்று அவர்களுடைய பாவங்களுக்கான உத்தரிக்கிறக் கடனை நீக்கி மோட்சத்திற்கு அழைத்துச் செல்கிறார்கள்.**

(இக்கட்டுரைத் தொடர் ஆஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்தில் உள்ள மாகாணத்தைச் சேர்ந்த அர்ச். 10-ம் பத்திநாதர் சபையின் குருவானவர் ஒருவர் ஆற்றிய உரைகளின் தொகுப்பான ***"The Ideal of the Catholic Family"*** என்ற சிறு நூலின் தமிழாக்கமாகும். இது நமது கத்தோலிக்கப் பெற்றோர் தங்கள் குழந்தைகளைக் கிறீஸ்தவப் புண்ணியங்களிலும், கத்தோலிக்கச் சூழ்நிலைகளிலும் வளர்க்கப் பெரும் உதவியாக இருக்குமென்று நம்புகிறோம். - ஆ.ர்.)

## முதல் உரை: **கத்தோலிக்க இல்லம்** (தொடர்ச்சி)

### இல்லங்களில் சேசுவின் திருஇருதய அரசாட்சி

இந்த நூற்றாண்டின் துவக்கத்தில், தென் அமெரிக்கக் குருவானவரான சங்.மாத்தியோ சுவாமி (Mateo) அகில உலகம் தழுவிய ஒரு இயக்கத்தைத் துவக்கினார். அது பெருமளவு வெற்றியும் பெற்றது. அவர், அர்ச். 10-ம் பத்திநாதர் பாப்பரசரின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டதும் அல்லாமல், இந்த இயக்கத்திற்காக அவரது வாழ்வைச் செலவிட வேண்டுமென்று, பாப்பரசரால் கேட்டுக் கொள்ளவும்பட்டார். முன்பு, பரலேமோனியலில் அர்ச்.மார்க்ரீத் மரியம்மாளுக்குக் காட்சி அளித்த நமது ஆண்டவர், "எனது திருஇருதயத்தின் சாயலை ஸ்தாபித்து சங்கை செய்யும் ஒவ்வொரு இல்லத்தையும் நான் ஆசீர்வதிப்பேன்" என்று உறுதியளித்தார். சங். மாத்தியோ சுவாமியின் இயக்கம், உலகம் முழுவதிலும் சேசு கிறீஸ்துவின் சமூக ஆட்சி (ராஜரீகம்) மீண்டும் நிறுவப் படுவதைக் குறிக்கோளாகக் கொண்டு துவக்கப்பட்டது. சமுதாயத்தைக் கிறீஸ்தவ மயமாக்க வேண்டுமென்றால், முதலில் ஒவ்வொருக் குடும்பத்தையும் கிறீஸ்தவமயமாக்க வேண்டுமென்பதை அறிந்திருந்த இந்த ஆன்மதாகம் மிகுந்த குருவானவர் சேசுவின் திருஇருதயத்திற்கு ஆன்மாக்களைக் கவர்ந்து கொண்டுவர, இல்லங்களில் அன்பின் அரசரின் அரசாட்சியை ஸ்தாபிக்க முயன்றார்.

இந்த அழகியக் கத்தோலிக்கப் பக்தி முயற்சியைப் பற்றி நீங்கள் ஏற்கனவே அறிந்திருப்பீர்கள். அதோடு உங்களில் அநேக இல்லங்களில் சேசுவின் திருஇருதயத்தின் அரசாட்சியை ஸ்தாபித்து இருப்பீர்கள். நல்லது! இங்கே நாம் பின்வரும் கேள்விக்கான பதிலைப் பெற்றுக் கொள்வதாகத் தோன்றுகிறது.

**எப்போது ஒரு வீட்டில் கத்தோலிக்கச் சூழ்நிலை ஏற்படும்?** மெய்யான தேவனும் மெய்யான மனிதனுமானவரான நமது ஆண்டவரின் அரசாட்சியின் கீழ் அவ்வீட்டின் **அனைத்தும்** உட்படும் போது. நான் **அனைத்தும்** என்று கூறுவது, நமது ஜெபதவங்களை மட்டுமல்ல, மாறாக, நமது பொழுது போக்குகள், நமது உணவுகள், நமது உடையணிகள், நமது பேச்சுக்கள் போன்றவற்றையும் சேர்த்து தான் குறிப்பிடுகிறேன். சேசுவின் திருஇருதய "அரசாட்சியை ஸ்தாபிப்பது" என்பது வெறுமனே ஒரு படத்தை மந்திரிப்பதோ அல்லது ஒரு அர்ப்பண ஜெபத்தை வாசிப்பதோ அல்ல. மாறாக, அது சேசுவின் திருஇருதயத்திற்காக அன்பின் வாழ்வாகிய ஒரு புதுவாழ்வுக்குத் துவக்கமாகவே இருக்கிறது. சேசுகிறீஸ்து அந்தக் குடும்பத்தின் அரசர். அவ்வாறே அவர் சங்கை செய்யப்பட வேண்டும்.

இல்லங்களில் சேசுவின் திருஇருதய சமூக அரசாட்சி - கத்தோலிக்கச் சூழ்நிலை அதன் உறுப்பினர்களுடைய அர்ச்சிஷ்டத்தனம் - அவர்களது நித்திய இரட்சணியம் - அதனால் மகா பரிசுத்தத் தமத்திரித்துவத்தின் மகிமை ஆகிய இவை அனைத்துமே ஒன்றோடொன்று பிணைக்கப் பட்டிருக்கிறது. அது எப்படியென்பதைப் பார்ப்போம். கிறீஸ்துநாதரின் ஞான சரீரமாகிய திருச்சபையின் சிரசான சேசுநாதர், சர்வேசுவரனுக்கும் மனிதருக்கும் மத்தியஸ்தராக இருக்கிறார். மடாதிபதியான மார்மியான் சுவாமியின் அழகிய புத்தகங்கள் விளக்குவது போல, சேசுகிறீஸ்து வழியாக நாம் சர்வேசுவரனின் சுவீகார மக்களாக இருக்கிறோம்; அர்ச். சின்னப்பர்: ''நீங்கள் மிகவும் பிரியமானப் பிள்ளைகளைப் போல், சர்வேசுவரனைப் பின்பற்றுகிறவர்களாயிருந்து கிறீஸ்துநாதர்... நம்மை சிநேகிப்பது போல் நீங்களும் சிநேகத்தில் நடந்து வருவீர்களாக... முன்பு நீங்கள் இருளாயிருந்தீர்கள்.

இப்பொழுதோ கர்த்தருக்குள் ஒளியாயிருக்கிறீர்கள். ஒளியின் புத்திரராக நடந்து கொள்ளுங்கள். ஒளியின் கனியோ சகலவித நன்மைத்தனத்திலும், நீதியிலும், சத்தியத்திலும் விளங்குகிறது“ (எபேசி. 5:1-2,8-9) என்று கூறுகிறார். நம்மைச் சுற்றிலுமுள்ள கடவுளற்ற நாத்தீக உலகம் ஒரு பயங்கர இருளில் மூழ்கியுள்ளது. கத்தோலிக்கக் குடும்பங்கள், உண்மையானக் கிறீஸ்தவ அன்பு அனுசரிக்கப்படுவதின் மூலம் சேசுவின் திருஇருதயத்துக்கு ஆறுதலும், இளைப்பாற்றியும் தரும் ஒளிரும் சிறிய பாலைவனச்சோலைகளாக இருக்க வேண்டும். இதிலிருந்து என்ன தெரிகிறது? கத்தோலிக்கச் சூழ்நிலையானது அன்பின் அடையாளமாக இருக்கிறது. மரியா வான் திராப் (Maria Von Trap) என்ற பக்தியுள்ள பெண்மணி தான் எழுதிய தன் குடும்பத்தைப் பற்றிய புத்தகத்தின் முன்னுரையில்: “குடும்பத்தின் நினைவுகளை எழுதும் போது, அது என்னை ஆச்சரியப்படுத்துகிறது, வியக்கச் செய்கிறது, குறுகிய வாழ்நாளில் உண்மை அன்பு எப்படி விளங்குகிறது என்பதைக் காணும் போது அது, என்னை மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறது. முதலில் **சர்வேசுவரனின் அன்பு**. அவரது குழந்தைகளான நம்மீது சர்வேசுவரன் கொண்ட அன்பு துணை நின்று பாதுகாக்கும் ஒரு தந்தையின் அன்பு. ஒவ்வொரு அன்பும் உண்மையான திரும்பி நேசிக்கும் அன்பாக இருக்கிறது“ என்று குறிப்பிடுகிறாள். கத்தோலிக்க இல்லம் ஒரு சுபாவத்துக்கு மேலான, சிநேகத்தால் ஆட்கொள்ளப்பட வேண்டும். ஆனால், இந்த நவீனக் காலங்களில் உண்மையான அன்பு அடிக்கடி தவறாகப் புரிந்து கொள்ளப்படுவதால், உண்மையான அன்பு எது என்பதை முதலில் தெளிவாக அறிந்துக் கொள்ள வேண்டும்.

(தொடரும்)

# செய்திகள்

## விமானப் பணிப்பெண்ணின் சாட்சியம்!

இங்கிலாந்து விமான நிறுவனமான ‘பிரிட்டிஷ் ஏர்வேஸ்‘ தனது பெண் ஊழியரான ‘நாடிய்யா ஈவ்விடா‘ என்பவளை மூன்று வாரத்திற்கு ஊதியமில்லா இடைநீக்கம் செய்தது. அவள் செய்த குற்றம்: தன் கழுத்தில் சிறு சிலுவையை அணிந்திருந்ததே! அது அந்நிறுவனச் சேவைக்கு ஏற்றதாக இல்லையாம்!!

இதுகுறித்து அந்தப்பெண்: “ஆண்டவராகிய சேசுவின் மேல் எனக்குள்ள விசுவாசத்தை மறைக்க விரும்பவில்லை; இஸ்லாமியப் பெண்கள் பர்தாவும், சீக்கிய மதத்தார் தலைப்பாகையும், மற்றவர்கள் தங்கள் மதச்சின்னங்களையும் அணிய அனுமதிக்கும் நிறுவனம், கிறீஸ்தவர்களுக்கு மட்டுமே தடை விதிக்கிறது‘‘ என்று கூறி, தன் விசுவாசத்தை வெளிப்படுத்தினாள். . .

**இதற்கு அந்த விமான நிறுவனம் என்ன பதில் கொடுத்தாலும், தீர்வை நாளில் வானத்தில் சிலுவையாகிய வெற்றிச்சின்னம் காணப்படும் போது என்ன பதில் தருமோ?**

## ஜெர்மனி நாட்டில் பாரம்பரிய திவ்விய பலிபூசையின் மேல் ஆர்வம்!

கடந்த மாதம் ஜெர்மனியில் உள்ள அர்ச். பத்தாம் பத்திநாதர் குருக்கள்சபை, முன்ஸ்டர் (Munster), ட்ரையர் (Trier), பெர்லின் (Berlin), மூனிக் (Munich), பிதர்போண் (Pederborn), கொலோங் (Cologne) ஆகிய மறை மாவட்டத்தைச் சார்ந்த நவீன சங்கச்சபை குருக்கள் 6500 பேருக்கு கடிதம் மூலமாக, பாரம்பரிய திவ்விய பலிபூசை எவ்வாறு ஒப்புக்கொடுப்பது என்று விளக்கிக் கூறும் DVD-யை வாங்குவதற்கு அழைப்பு விடுத்தது. இதற்கு RU ANEC என்ற செய்தி நிறுவனத்தின் தகவலின்படி, 1000 குருக்களும், 100 குருமாணவர்களும் இதை வாங்க விண்ணப்பித்துள்ளார்கள்.

## தமிழகத்தில் பாரம்பரிய லத்தீன் திவ்விய பலிபூசை நடைபெறும் இடங்களும் அதன் முகவரியும் :

**பாளையங்கோட்டை:**

அர்ச். தமத்திருத்துவ குருக்கள் இல்லம்,
ஆன்னி நகர், சீவலப்பேரி ரோடு
பாளையங்கோட்டை - 627 002.
தொலைபேசி எண்: 0462 - 2572389; 2586201.

**சிங்கம்பாறை :**

அர்ச். அந்தோணியார் ஆலயம்,
சிங்கம்பாறை. முக்கூடல் அருகில்,
திருநெல்வேலி மாவட்டம்,
தொலைபேசி எண்: 0462 - 2572389.

**கிறீஸ்துராஜபுரம் :**

கிறீஸ்துராஜா ஆலயம்,
கிறீஸ்துராஜபுரம், ஐரேனிபுரம் (P.O.),
கன்னியாகுமரி மாவட்டம்.
தொலைபேசி எண்: 04651 - 294785.

**நாகர்கோவில் :**

இராமன்புதூர்,
தொலைபேசி எண்: 0462 - 2572389.

**தூத்துக்குடி :**

அர்ச். பிரான்ஸிஸ் சவேரியார் ஆலயம்,
கேலெப் ஹோம்,
88B, வெற்றிவேல்புரம் (முருகன் தியேட்டர் அருகில்),
தூத்துக்குடி.
தொலைபேசி எண்: 9942707246.

**ஆசாரிப்பள்ளம் :**

அர்ச். அந்தோணியார் ஆலயம்,
மேல ஆசாரிபள்ளம், கன்னியாகுமரி மாவட்டம்,
தொலைபேசி எண்: 0462 - 2586201.

**திருச்சி :**

No-7, ஜவஹர் தெரு, 15-வது குருக்குச்சாலை,
குமரன் நகர், திருச்சி - 17
தொலைபேசி எண்: 0431 - 2770042.

**சென்னை :**

அர்ச். அந்தோணியார் மெட்ரிக்குலேஷன் பள்ளி வளாகம்,
சின்ன மலை, சென்னை - 600 015.
தொலைபேசி எண்: 044 - 22355389.

உங்களது சந்தா மற்றும் கேள்விகளை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:


Society of St. Pius X
#1, Marcel Lefebvre Place, Annie Nagar, Seevalaperi Road,
Palayamkottai, Tirunelveli – 627 002.
✆ 0462-2586201; 2572389. e-mail: sspxinja@sancharnet.in


**ஓ எனது இராக்கினியான மரியாயே, வானத்திற்கு மேலாகிலும், வானத்திற்கு கீழாகிலும் உமக்கு ஒப்பானவர் எவரும் இருக்க முடியாது. சர்வேசுவரன் ஒருவரே உமக்கு மேலானவர். மற்ற அனைவரும் கீழானவர்களே!** – அர்ச். ஆன்செல்ம்.